# தொன்போஸ்கோ தொழில்நுட்பக் கல்லூரி

## கலை விழா போட்டிகள் 2023

விபரங்களும் விதிமுறைகளும்:

ஓவியப்போட்டி :

1. போட்டிக்கான தலைப்பு போட்டி நடைபெறும் அன்று கொடுக்கப்படும்.
2. மாணவ மாணவிகள்  கல்லூரியில் இருந்து வழங்கப்படும், a4 சீட் அல்லது a4 சீட் அளவிலான சார்ட் பேப்பரில் வரைந்து தர வேண்டும்.
3. வரைதற்காக உங்களுக்கு கொடுக்கப்படும் நேரம் 40 நிமிடங்கள் மட்டுமே.
4. ஓவியம் வரைவதற்கு தேவையான உபகரணங்களை, தாங்களே கொண்டு வர வேண்டும்.
5. தலைப்பிற்கு ஏற்ற வரைபடம், தகுந்த வண்ணம், கலைத்திறமை ஆகியவற்றிற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.
6. ஓவிய போட்டிக்காக ஒரு வகுப்பில் அதிகப்பட்சம் மூன்று பேர் பெயர் கொடுக்கலாம்.
7. ஓவிய போட்டி, வருகின்ற 27.9.23 அன்று, கடைசி பாட வேளையில், கல்லூரி Drawing Hallல் நடத்தப்பெறும்.

2. தனிநபர் பாடல் போட்டி

1. தனிநபர் பாடல் போட்டிக்காக, ஒரு வகுப்பில் அதிகபட்சம் மூன்று பேர் பெயர் கொடுக்கலாம்.
2. மேடைக்கு ஏற்ற, கருத்துள்ள, விழிப்புணர்வு, அல்லது கருத்துள்ள சினிமா  பாடல்களாக இருத்தல் அவசியம்.
   பின்னணி இசை உடன் பாடுவது வரவேற்கத்தக்கது.
3. ஒரு நபருக்கு, தனிநபர் பாடலுக்காக, நான்கு (4) நிமிடங்கள் மட்டுமே வழங்கப்படும்.
4. பாடல் தேர்வு, குரல்வளம், மற்றும் சரியான தாளத்திற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.
5. தனிநபர் பாடலுக்காக பயிற்சி எடுக்க, கல்லூரியில் நேரம் தரப்பட மாட்டாது.

6. தனிநபர் பாடல் போட்டியானது, 22.9.23 வெள்ளிக்கிழமை AV Hallல் நடைபெறும்.

## 3. தனிநபர் நடன போட்டி

1. தனிநபர் நடனத்திற்காக, ஒரு வகுப்பில் அதிகப்பட்சம் மூன்று பேர் பங்கெடுக்கலாம்.
2. மேடைக்கு ஏற்ற, கருத்துள்ள, விழிப்புணர்வு, நாட்டுப்புற அல்லது கருத்துள்ள சினிமா பாடலுக்கு மட்டுமே நடனம் ஆட வேண்டும்.
3. பாடல் தேர்வு, சிறந்த நடன அசைவுகள், மற்றும் தகுந்த உடை ஆகியவற்றிற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.
4. தனிநபர் நடனத்திற்காக, ஒரு நபருக்கு நான்கு (4) நிமிடங்கள் மட்டுமே வழங்கப்படும்.
5. தனிநபர் நடனத்திற்காக பயிற்சி எடுக்க, கல்லூரியில் நேரம் தரப்பட மாட்டாது.
6. தனிநபர் நடனப் போட்டியானது, 30.9.23 சனிக்கிழமை கல்லூரி AV Hallல் நடைபெறும்.

## 4. குறும்பட போட்டி

1. போட்டியின் தலைப்பு: சமூக விழிப்புணர்வு அல்லது கல்வி பற்றிய கருத்துக்கள் கொண்ட குறும்படமாக இருத்தல் வேண்டும்.
2. இந்த போட்டிக்காக ஒரு வகுப்பில் இருந்து ஒரு குழு மட்டும் கலந்து கொள்ளலாம்.
3. குறும் படத்திற்கான நேரம் 4 நிமிடங்கள் மட்டுமே.
4. குறும்படத்தினை ஆசிரியர் ஆரோக்கிய சாமியிடம் சமர்ப்பிக்க வேண்டிய இறுதி நாள் 25.09,2023. அதன் பிறகு வரும் குறும் படங்கள் ஏற்றுக் கொள்ளப் பட மாட்டாது.

## 5. குழு பாடல் போட்டி

1. ஒவ்வொரு வகுப்பிற்கும், ஒரு குழு மட்டும் பங்கேற்கலாம்.
2. ஒரு குழுவிற்கு, குறைந்தபட்சம் மூன்று பேரும், அதிகபட்சம் 10 பேர் வரை பங்கேற்கலாம்.

3. மேடைக்கு ஏற்ற, கருத்துள்ள விழிப்புணர்வு, அல்லது கருத்துள்ள சினிமா  பாடல்கள் மட்டுமே வரவேற்கத்தக்கது.
4. பின்னணி இசையுடன் பாடுவது வரவேற்கத்தக்கது.
5. பாடல் தேர்வு, குரல் ஒத்திசைவு, இசைக்கு ஏற்ற தாளம், போன்றவற்றிற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.
6. குழு பாடல் போட்டி, வருகின்ற 22.9.23 வெள்ளிக்கிழமை அன்று, இல்லத்தில் உள்ள AV Halll் நடைபெறும்.
7. குழு பாடல் பயிற்சிக்கு அதிக பட்சம் 2 பாடவேளைகள் மட்டும் நெறியாளர் தந்தை அனுமதியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

## 6. குழு நடன போட்டி.

1. ஒவ்வொரு வகுப்பிற்கும், ஒரு குழு மட்டும் பங்கேற்கலாம்.
2. ஒரு குழுவிற்கு, குறைந்தபட்சம் 5 பேரும், அதிகபட்சம் 10 பேர் வரை பங்கேற்கலாம்.
3. மேடைக்கு ஏற்ற, கருத்துள்ள விழிப்புணர்வு, அல்லது கருத்துள்ள சினிமா பாடலுக்கு மட்டுமே நடனம் ஆட வேண்டும்.
4. பாடல் தேர்வு, ஒத்த நடன அசைவுகள், மற்றும் தகுந்த உடை ஆகியவற்றிற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.
5. குழு நடன போட்டி, வருகின்ற 30.9.23 சனிக்கிழமை அன்று, இல்லத்தில் உள்ள AV Halll் நடைபெறும்.
6. பயிற்சிக்கு அதிக பட்சம் 2 பாடவேளைகள் மட்டும் நெறியாளர் தந்தை அனுமதியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

## 7. KATHAMBAM (கதம்பம்) போட்டி:

1. ஒரு நல்ல கருத்தை தெரிவிக்கும் பொருட்டு, ஊமை நாடகம், நடனம் அல்லது நாடகம், பாடல்கள் போன்றவற்றை கலந்து அதிகபட்சம் 15 நிமிடம் கதம்பம் போல கொடுக்க வேண்டும்.
2. கதம்பம் போட்டியில் ஒரு வகுப்பில் இருந்து, ஒரு குழு பங்கேற்கலாம். ஒரு குழுவிற்கு, குறைந்தபட்சம் 5 நபர்களும், அதிகப்பட்சம் 10 நபர்களும் பங்கேற்கலாம்.
3. கருத்துத்தேர்வு, நடிப்பு திறமை, மற்றும் தகுந்த உடை ஆகியவற்றிற்கு மதிப்பெண்கள் வழங்கப்படும்.

4. கதம்பம் போட்டி, வருகின்ற 04.10.23 புதன்கிழமை அன்று, இல்லத்தில் உள்ள AV Hallல் நடைபெறும்.
5. பயிற்சிக்கு அதிக பட்சம் 2 பாடவேளைகள் மட்டும் நெறியாளர் தந்தை அனுமதியுடன் பெற்றுக் கொள்ளலாம்.

## குறிப்பு :

1. மேற்கண்ட தேதிகளில் நடைபெறும், ஓவிய போட்டி தவிர, மற்ற அனைத்து போட்டிகளும், இறுதி சுற்றுக்கு தேர்வு செய்யும் போட்டியே. இவற்றிலிருந்து முதல் நான்கு இடங்கள் மட்டும் தேர்வு செய்யப்பட்டு, வருகின்ற 06.10.2023 அன்று நடைபெறும், கல்லூரி கலை விழாவில், இறுதிச்சுற்று நடத்தப்பட்டு, முதல் மூன்று இடங்கள் தேர்வு செய்யப்படும்.

2. ஒவ்வொரு இடத்திற்கும் மதிப்பெண்கள் உண்டு. மேலும் அதிக மதிப்பெண் பெற்ற வகுப்பிற்கு, வெற்றி கோப்பை வழங்கப்படும்.